MISSION PRESS 1840
PONDICHERRY

# சர்வவியாபி

SARVA VIABI

ESTD:1.3.1907
(Year-115)

| 28-05-2023 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | சோபகிருது வருடம் ( வைகாசி 14 ) | வருட சந்தா ₹ 200 தனிப்பிரதி ₹ 6 |
|---|---|---|---|---|

| புத்தகம் 60 | இதழ் 22 பக்கம்-12 | e-mail:missionpress48@gmail.com e-mail:missionpress48@yahoo.com | Ph: 0413/ 2334360 | ஆசிரியர் : பேரருள்பணி ஆ. அருளானந்தம் துணை ஆசிரியர் : அருள்பணி L.ஆரோக்கியதாஸ் |
|---|---|---|---|---|

## பிறரின் மாண்பை கெடுப்பது புறங்கூறுதல்

– திருத்தந்தை



***தீய ஆவியின் தூண்டு தலால் வரும் புறங் கூறுதலை தவிர்த்து அனைவரும் அன்புடன் நண்பர்களாக வாழ வேண்டும் - திருத்தந்தை பிரான்சிஸ்***

மே 20 சனிக்கிழமை ஜெனோவா உயர் மறை மாவட்டத்தை சார்ந்த உறுதிப்பூசுதல் திருவருளடையாளத் தயாரிப்புப் பெறும் ஏறக்குறைய 1000 சிறாரை சந்தித்த போது, "அடுத்தவரைப் பற்றிப் பேசும் புறங்கூறுதல் மிகவும் கெடுதலானது. அடுத்தவரின் மாண்பை சிதைக்கப் பயன்படுத்தப்படும் புறங்கூறுதல் அதனை செய்பவரின் மாண்பினை அழிக்கின்றது. மேலும் தீய ஆவியின் தூண்டுதலால் வரும் புறங்கூறுதலை தவிர்த்து அனைவரும் அன்புடன் நண்பர்களாக வாழவேண்டும். புறங்கூறுதலைத் தவிர்க்க நாக்கினைக் கட்டுப்படுத்த வேண்டும்" என்று அறிவுறுத்தினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

"மனிதர்களாகிய நாம் அனைவரும் இப்பூமியின் துகள்கள் என்றும் விண்ணகத்திலிருந்து பொழியப்பட்ட கடவுளின் கனவுகளை உள்ளடக்கியத் துகள்கள்" என்றும் டுவிட்டர் குறுஞ்செய்தி ஒன்றினை மே 20 சனிக்கிழமை பதிவிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

## இளையோர் மீதான நமது அணுகுமுறை மாறட்டும் – திருத்தந்தை

"மாற்றத்தின் சுவை" என்ற இத்தாலிய நூல் ஒன்றிற்கு எழுதியுள்ள அணிந்துரையில், "இயற்கை வளங்களைச் சூறையாடும் நமது வாழ்க்கை முறையை மாற்றிக்கொள்ளவும், எல்லையற்ற பூமியின் வளங்களுடனான நமது உறவைப் புதுப்பித்துக் கொள்ளவும் வேண்டும்" என்று கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். இந்நூலானது தன்னுள் அழகான மற்றும் நல்லவற்றின் உண்மையான "சுவையை" உருவாக்கியுள்ளது. நம் அனைவருக்கும் புறநிலையாகத் தேவையான மாற்றத்தை இளையோர் உருவாக்குகிறார்கள் என்பதை நாம் நேர்மையுடன் ஒப்புக் கொள்ள வேண்டும். அவர்கள்தான் உலகின் பல்வேறு பகுதிகளிலும் நம்மை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று கேட்கின்றனர். இளையோர்மீதான நமது அணுகு முறையை மாற்றிக்கொள்ள வேண்டும், காரணம், அவர்கள் சொல்வதை செயலில் காட்டுகிறார்கள் என்றும், தெருக்களில் இறங்கி, ஏழைகளுக்கு நியாயமற்ற மற்றும் சுற்றுச்சூழலின் எதிரியான பொருளாதார அமைப்பிற்கு எதிராகத் தங்களின் எதிர்ப்பை வெளிப்படுத்தி, வாழ்வுக்கான புதிய வழிகளைத் தேடுகிறார்கள்" என்றும் உரைத்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

## மனம் மலர



- அருட்தந்தை. P.மரியதாஸ்
தர்மபுரி மறைமாவட்டம்.

கடினமாய்
உழைத்தவர்களைவிட

கவனமாய்
உழைத்தவர்களே

வாழ்க்கையில்
முன்னேறுகிறார்கள்





உப்பான வியர்வைத்
துளிகளே

இனிப்பான வாழ்க்கையைத்
தருகின்றன



பணம் கொடுத்தால்
போற்றும்

பணம் கேட்டால்
தூற்றும் - உறவுகள்

ஆசிரியர் பேனா...

# நம் முன்னோரை பின்பற்றுவோம்

‘உண்மைக்கு சாட்சியம் சொல்வதே என் பணி, அதற்காகவே வந்தேன்’ என்பது இயேசுவின் உறுதிப்பாடு. சிலுவையிலே கொலை செய்யப்பட்ட இந்த இயேசு உயிர்த்தார்; இன்றும் நம்மை இயக்கும் ஆவியாக நம்மத்தியில் செயலாற்றுகின்றார் என்பது அவரோடு இருந்த சீடர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை. இந்த நம்பிக்கையை தளர்வுறாமல், இழந்துவிடாமல் இருக்க அவர்கள் பல சிரமங்களையும், எதிர்ப்புக்களையும், தாக்குதல்களையும் ஏற்கவேண்டி இருந்தது. சீடர்களின் நம்பிக்கையை ஏற்று சகோதரர்களாக வாழ்ந்த புதிய குழுவினரை அழித்தொழிக்க அரசியல், ஆதிக்க சக்திகளின் பின்புலத்தோடு வெகுண்டெழுந்தவர் சவுல் என்ற படித்த, யூத மறையில் உறுதியோடு இருந்த வா-பர். அவருடைய படிப்பும், மறை உறுதியும், பின்புலமும் உயிர்த்த இயேசுவால் தகர்க்கப்பட்டன. சீடர்கள் அறிவித்த உண்மை (இயேசு) சவுலை வீழ்த்தி பவுலாக பிறப்பெடுக்கச் செய்கின்றார்.

பவுல் இயேசுவே ஆண்டவர்; அவரே நம்மை வாழவைப்பவராகவும், நம்மில் வாழ்பவராகவும் இருக்கின்றார் என்று நம்பினார். எந்த அளவுக்கு அவர் இயேசுவால் இயக்கப்பட்டார் என்றால், ‘வாழ்வது நானல்ல என்னில் இயேசுவே வாழ்கின்றார்’ என்ற உணர்விலே ஊறி இருந்தார். அந்த இயேசுவை மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்துவதையே தன் வாழ்க்கையாக மாற்றிக் கொண்டார். இயேசுவும் அவரோடு இருந்து அவரை ஊக்கப்படுத்தினர். கொரிந்து நகரிலே பவுல் எதிர்ப்புக்களை சந்தித்தபோது இயேசு அவரை வலுப்படுத்தினார். “....அஞ்சாதே; பேசிக்கொண்டயிரு; நிறுத்தாதே, ஏனெனில் நான் உன்னோடு இருக்கிறேன். எவரும் உனக்குத் தீங்கிழைக்குப் போவதில்லை, இந்நகரத்தில் எனக்குரிய மக்கள் பலர் இருக்கின்றனர்” (திப. 18:9-10).

பவுலடியாரைப் போன்றே, இயேசுவை மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்ற தாகமும், தாக்கமும் பாரிஸ் அன்னிய வேதபோதக குருக்களிடம் இருந்தது. அவர்கள், அன்றைய பரந்து விரிந்திருந்த புதுவை உயர் மறைமாநிலத்தை தங்கள் கடின உழைப்பாலும், தியாகம் நிறைந்த வாழ்வாலும் கட்டி எழுப்பினர். அவர்களுடைய வாழ்க்கை அனுபவங்கள் இன்று நம் குருக்களுக்கு ஊக்கம் அளிக்கும் என்று நம்பலாம்.

திண்டிவனம் கத்தோ-க்க நடுநிலையத்திற்கு (1888-1941), வித்திட்டு வளர்த்த அருட்தந்தை தாமஸ் கவான் டஃப்பி அடிகளாரின் வாழ்க்கை சரித்திரத்தை ஜெராடு பிராடி என்பவர் எழுதிய பிரதியை படிக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அதிலே அன்னிய வேதபோதக குருக்களின் நற்செய்தி ஆர்வத்தையும் அவர்கள் பட்ட வேதனைகள், செய்த தியாகங்களையும் அருட்தந்தை கவான் டஃப்பி விவரித்து தன் உறவுகளுக்கு எழுதுகின்றார். அதன் ஒரு சிறு பகுதியை தமிழாக்கம் செய்து தருவது நன்மை பயக்கும் எனக் கருதுகிறேன்.

“அன்னிய வேதபோதக குருக்கள் உடல், மனம், உள்ளம் ஆன்மாவின் நிலைகளில் தனிமையில் கைவிடப்பட்ட உச்சக்கட்ட வேதனையை அனுபவித்தனர். இரத்தத்தை கொதிப்படையச் செய்யும் தாங்கொன்னா வெப்பத்தில் துடிக்க வேண்டும். இரவுத் தூக்கம் என்பது ஓய்வில்லை; அச்சமூட்டும் பதற்றம் நிறைந்தது. வழக்கமாக செய்ய வேண்டிய வேலைகளைச் செய்ய முடியாத சக்தியற்ற உடல் சோர்வு வாட்டிவதைக்கும். அத்திப்பூத்தார்போல சகோதர குருக்களை சந்திப்பது மட்டுமே சோர்வையும் தனித்துக்கொள்ள ஒரே வழி.

மனச் சோர்வையும், கவலைகளையும் எதிர்த்துப் போராட அவர்களுக்கு மனஉறுதியும், ஆழ்ந்த பக்தியும், உடல் வ-மையும் உறுதியான ஒழுக்கமும் தேவைப்பட்டன. அவர்களை ஓயாமல் வாட்டி வதைக்கும் மனச்சோர்வையும், கையறு நிலையையும் அவர்கள் எதிர்த்து போராட வேண்டியுள்ளது. (Thomas Gavan Duffy 1888 - 1941) by Gerard Brady, page. 186-187).

‘நண்பர்களே, கடவுள் உங்களை விரைந்து அழைத்துச் செல்லும் பாதையில் வெற்றியடையுங்கள்.

நரகத்தின் மீது இயேசுவின் வெற்றியை பறைசாற்றுங்கள்; மண்ணகத்தில் பணி முடிந்தது விண்ணகத்தில் மீண்டும் சந்திப்போம். சென்று வாருங்கள் சகோதரர்களே சென்று வாருங்கள்.

நீங்கள் எங்களுக்கு இறந்தோராகிவிட்டீர்கள்; இனி ஒருபோதும் நாம் சந்திக்கமாட்டோம். ஆவலோடு நீங்கள் காத்துக் கிடந்த நாள் வந்துவிட்டது; ஆன்ம தாகத்தால் உந்தப்பட்ட நீங்கள் மகிழுங்கள் பாவம் மற்றும் மரணத்தின் பிடியில் இருப்போருக்கு நற்செய்தியை தாங்கிச் செல்வோரின் பாதங்கள் எவ்வளவு அழகானவை சென்று வாருங்கள்; சென்று வாருங்கள்’ என்று பாடி உறவினர்கள் தங்கள் பாதங்களை முத்தமிட்டு, வழியனுப்பியதை அவர்கள் அடிக்கடி நினைத்துப் பார்த்து ஊக்கம் அடைந்தனர்.

சகோதர குருக்களே! நம் பெற்றோரும், உறவினரும் நம்மை குருத்துவ பணிக்கு அர்ப்பணித்ததை எண்ணிப் பார்த்து ஊக்கம் பெறுவோம். நற்செய்தி அறிவிப்பு பணியை உவப்புடன் செய்ய அழைத்த இறைவனை நம்பி, நம் (அன்னிய வேதபோதக குருக்களை) முன்னோரை பின்பற்றுவோம், செயல்படுவோம்.



07-06-2023

## நிறைவுள்ளவர்களாய் வாழ்வோம்



**அருள்திரு. P. லூர்து ஜெயராஜ்,**
பங்குதந்தை, முன்னூர்.!

ஒரு பிச்சைக்காரன் பணக்காரன் ஒருவனுடைய வீட்டிற்கு வந்தான். பணக்காரனும் பிச்சைக்காரனின் மீது இரக்கப்பட்டு அவனுக்கு உணவு கொடுத்தார். உணவைப் பெற்றுக்கொண்ட பிச்சைக்காரன், "என்ன கொஞ்சமாக சோறு போடுகிறாய்?" என்று அந்தப் பணக்காரனை திட்டினான். அதோடு மட்டுமல்லாமல் என்னை ஏன் கடவுள் இப்படிப் படைத்தானோ? என்று கடவுளையும் திட்டினான். கோபம் கொண்ட பணக்காரன் பிச்சைக்காரனை அதிகமாகத் திட்டி இனி நீ இந்தப் பக்கமே வரக்கூடாது என்று துரத்திவிட்டான். அன்று இரவு தூங்கிக் கொண்டிருந்தபோது பணக்காரனின் கனவில் கடவுள் தோன்றி "ஏன் உன்னிடம் இன்று பிச்சை கேட்டவனை அவ்வாறு திட்டினாய்? அவன் என்னை இருபது ஆண்டுகளாக தினமும் இப்படித்தான் திட்டிக்கொண்டிருக்கிறான். அதை நான் பொறுத்துக்கொண்டு, அவனை மன்னித்து, அன்பு செய்து என் மகனாக ஏற்றுக்கொண்டு பாதுகாத்து வருகின்றேன். இன்று ஒரு நாள்தான் உன்னைத் திட்டினான் அதை உன்னால் பொறுத்துக்கொள்ள முடியவில்லையே!" என்றார்.

***மூவொரு இறைவன்:*** வாழ்க்கையில் புரிந்துகொள்ள முடியாத புதிர்களும், விடை காண இயலாத கேள்விகளும் நிறைய உள்ளன. அப்படிப் புரிந்துகொள்ள முடியாத, நம் சிற்றறிவுக்கு எட்டாத கேள்விகளில் முதன்மையாக இருப்பது இன்று நாம் திருச்சபையோடு இணைந்து கொண்டாடிக் கொண்டிருக்கின்ற மூவொரு கடவுள் பெருவிழா. அதாவது, ஒரே கடவுள் மூன்று ஆட்களாய் இருக்கின்றார்கள் என்கின்ற மறையுண்மை. தந்தை, மகன், தூய ஆவி என்று மூன்று கடவுள்கள் தானே? இல்லை, ஒரே கடவுள். ஏனென்றால் மூன்று பேருக்குமே எந்தவொரு வேறுபாடுமின்றி , ஒரே ஞானம், ஒரே திருவுளம், ஒரே வல்லமை, ஒரே இறைத்தன்மை இருக்கின்றது. எனவே அவர்கள் ஒரே கடவுள், ஆனால் மூன்று ஆட்களாக இருக்கின்றார்கள் என்கின்றோம். இக்கூற்றை நாம் புரிந்துகொள்ள முயலவேண்டும். நம் கிறிஸ்துவ விசுவாசத்தையே மிகவும் ஆழப்படுத்துகின்ற ஒரு விழா இந்த மூவொரு இறைவன் பெருவிழா என்றால் அது மிகையாகாது. ஒரு வருடம் முழுவதும் நாம் கொண்டாடுகின்ற விழாக்களையும், இறைவார்த்தைகள் மூலமாக கேட்கின்ற அனைத்தும் நாம் கடவுள் மேல் உள்ள விசுவாசத்தை வெளிப்படுத்துகின்றன. ஆனால், இன்றையப் பெருவிழாதான் நம் விசுவாசத்தை இன்னும் அதிகமாக ஆழப்படுத்துகின்றது. இதைத்தான் இன்றைய நற்செய்தி வாசகம் "நாம் ஆண்டவர் இயேசு வழியாக தந்தை கடவுள் மீதும் தூய ஆவியார் மீதும் நம்பிக்கை (விசுவாசம்) கொள்ளும்போது தண்டனைத் தீர்ப்பை பெறாமல் நிலைவாழ்வை பெறுகின்றோம்" என்று எடுத்துரைக்கின்றது.

***மூன்று:*** விவிலியத்தில் மூன்று, ஐந்து, ஏழு, பன்னிரெண்டு, நாற்பது, ஐம்பது போன்ற எண்களெல்லாம் பல இடங்களில் இருப்பதை நாம் பார்க்கின்றோம். ஆனால் மூன்று மற்றும் ஏழு என்பது முழுமையைச் சுட்டிக்காண்பிக்கும் எண்கள். இங்கு தந்தை கடவுள், மகன் இயேசு மற்றும் தூய ஆவி இந்த மூன்று நபர்கள் முழுமையானவர்களாக, நிறைவுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்பதே இன்றைய விழா சுட்டிக்காட்டும் உண்மை. நிறைவான கடவுளை விசுவசிக்கும் நாமும் நிறைவுள்ளவர்களாக வாழ முயற்சிக்க வேண்டும். "உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பது போல நீங்களும் நிறைவுள்ளவராய் இருங்கள்" (மத்.5:48) என்பது இயேசுவின் அழைப்பு.

***செயல்பாடுகள்:*** பழைய ஏற்பாட்டில் "இருக்கின்றவர் நாமே" என்று வெளிப்படுத்திய கடவுள், இன்றைய முதல் வாசகத்தில் பேரன்பும், இரக்கமும், பரிவும் கொண்டவராய், சினம் கொள்ள தாமதிப்பவராய், நம்பிக்கைக்குரியவராய் தன்னை வெளிப்படுத்துகின்றார். பெற்ற தாய் உன்னை மறந்தாலும் நான் உன்னை மறவேன் (எசா.49:15) என்று கூறி நம் தேவை அறிந்து நமக்கு எந்நாளும் உதவி செய்யும் அன்பு தந்தைக் கடவுளின் அன்பு. எல்லாவற்றிற்கும் மேலாக நம்மீது தன் அன்பை முழுமையாகப் பொழிந்து நம் அனைவரின் மீட்புக்காக தம் மகனையே உலகிற்காக கையளித்த அன்பு கடவுளின் அன்பு (யோ.3:16). நீங்கள் வாழ்வு பெறும் பொருட்டு அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு வந்தேன் (யோவா.10:10) என்று கூறி வார்த்தை மனுவுருவாகி நம்மிடையே குடிகொண்டவர் ஆண்டவர் இயேசு கிறிஸ்து. "இதோ! உலகம் முடிவு வரை நான் எந்நாளும் உங்களுடன் இருக்கிறேன்" (மத்.28:20) என்று கூறி நமக்காக தந்தையிடம் பரிந்து பேசுபவராக, தந்தையிடம் நம்மை அழைத்துச் செல்பவராக இருக்கின்றார். இயேசு எல்லாவற்றிற்கும் மேலாக நான் உங்களைத் திக்கற்றவர் களாக விடமாட்டேன். ஒரு துணையாளரை உங்களுக்காகத் தருமாறு தந்தையிடம் கேட்பேன்" (யோ.14:15,18) என்று கூறி தூய ஆவியைப் பொழிந்து, "நானே வாழ்வு தரும் உணவு" (யோ.6:48) என்று நற்கருணை வழியாக தன் அன்பின் பிரசன்னத்தை நமக்காக என்றும் தந்து கொண்டிருக்கிறார். தந்தையுடையதும், மகனுடையது மானவர்தான் தூய ஆவி. இவர் தனித்து செயல்படுவர் அல்ல. இணைந்து செயல்படுபவர். மகன் இயேசு விட்டுச் சென்ற பணியைச் சீடர்கள் தொடர்ந்து செய்ய துணையாய் நிற்பவர். நம்மை இறைவனின் ஆலயமாக்கி மீண்டும் மீண்டும் புதுப்பித்து இயேசுவின் சாட்சியாய் விளங்கச் செய்பவர்.

***நிறையுள்ளவர்களாய் வாழ்வோம்:*** இந்த உலகில் கடவுள் (மூவொரு கடவுள்) மட்டுமே நிறைவானவர், முழுமையானவர். நாம் மனிதர்கள், பலவீனமானவர்கள், நிறை-குறைகளோடு வாழ்பவர்கள். இருப்பினும் நிறைவுள்ளவர்களாக வாழ்வது என்பது எட்டாத கனி அல்ல. நம்மிடையே இருக்கின்ற சுயநலத்தை அகற்றி, பகைமையை மறந்து, பிரிவினைகளைக் களைந்து, ஒருவர் மீது ஒருவர் உண்மையான முழு அன்பைக் காட்டும்போது நாமும் மூவொரு இறைவனைப் பின்பற்றி நிறைவுள்ளவர்களாக, முழுமை பெற்றவர்களாக வாழ முடியும். எனவே நம் குறைகளையும், பலவீனங்களையும் பின்னுக்குத் தள்ளி நிறைவை நோக்கி நடைபோடுவது அவசியம். நிச்சயமாக மனித முயற்சியினால் மட்டும் நம் குறைகளை, பலவீனங்களை வெற்றி கொள்வது இயலாத காரியம். நமக்கென்று வல்லமையையும் அருளையும் வழங்கத் தயாராக இருக்கும் இறை உதவியை நாடினோம் என்றால் மூவொரு இறைவன் நம்மை நிறைவுள்ளவர்களாக, முழுமையுள்ளவர்களாக மாற்றுவார். இதற்காக வரம் வேண்டி தொடர்ந்து செபிப்போம். இறை ஆசீரைப் பெறுவோம்.



# விண்ணில் மாட்சி, மண்ணில் அமைதி



– சுவாமி ஆ. லூயிஸ்.

மூவொரு இறைவனின் இரண்டாம் ஆள் மனுவுரு எடுத்தபோது, வானதூதர் விண்ணுலகில் கடவுளுக்கு மாட்சிமை, பூஉலகில் நல்ல மனது உள்ளவர்கட்கு சமாதானம் என்று அன்று பாடியது இன்றும் திருச்சபை முழுவதும் புகழப்பட்டு வருவதை நாம் அறிவோம். எனவே யாரும் கவலைப்பட இடமில்லை. இருப்பினும் நம்பிக்கையின் பலவீனத்தால் இறைமக்களும், கிறிஸ்தவர்களும் கவலைக்கு ஆளாகி பல்வேறு விதமான வேதனைகட்கு அவஸ்தைப்படுகின்றனர். நம்பிக்கையை பலப்படுத்தி மக்களைக் கட்டி எழுப்புவோம்.

**பல்சமய உணர்வு:** பாவத்தைத் தவிர்த்து மற்ற எல்லாவற்றையும் இயேசு ஏற்கிறார் என்பதை முழுமையாகப் புரிந்து கொள்வோம். சமயம் நம்மைப் பிரிக்காது இணைக்க வேண்டும் என்பதை மறவோம்.

இறைமக்கள் உம்மைப் புகழ்ந்து போற்றுகின்றனர்.
தீய ஆவி விலக, தூய ஆவி நம்மை சூழ்க
நீர் எல்லாவற்றிலும் இருக்கின்றீர்.
மனிதத்தோடு நீர் என்றும் பயணிக்கின்றீர்.
அனைத்தையும் படைக்கின்றவரே
உமக்கு ஆராதனை என்றும் ஆராதனை
என்னைச் சூழ்ந்து இருப்பவர், ஆராதனை
நான் தவறுசெய்தால், மன்னித்தருளும்.
தந்தை-மகன், நண்பன்-நண்பன், காதலன்-காத-
என உறவின் தோழமையில் வாழ்ந்திட அருளும்.
என்மீது இரக்கமாயிரும், உம்மை வெளிப்படுத்தும்.

**நற்செய்தி:** ஆண்டவரே, எங்கள் தலைவரே, உமது பெயர் உலகெங்கும் எவ்வளவு மேன்மையாய் விளங்குகிறது. என் தலைவரே, தலைமுறைதோறும், நீரே எங்கள் புக-டமாய் உள்ளீர். இயேசு தூய ஆவியால் பேருவகையடைந்து, "தந்தையே உம்மைப் போற்றுகிறேன்" என்கிறார். அரியணை அருகே இருபத்து நான்கு மூப்பர்கள் வீற்றிருந்தார்கள், பொன்முடி சூடியிருந்தார்கள். தூயவர், தூயவர், தூயவர் மண்ணுலகம் முழுவதும் அவரது மாட்சியால் நிறைந்துள்ளது. உலகின் ஆட்சி உரிமை, நம் ஆண்டவருக்கும், அவருடைய மெசியாவுக்கும் உரியதாயிற்று, அவரே என்றென்றும் ஆட்சிபுரிவார்.

**விண்ணில்:** வாழ்வுக்கு இறப்பு இல்லை என்பதை உயிர்த்த ஆண்டவர் அனைவருக்கும் அளித்து வருகிறார். வாழ்வு என்றும் வாழ்வோடு இருக்க இயங்க உடலான படைப்பு, படைக்கின்றவரோடு இணைந்து செயல்படுவதாக. விண்ணில் வானதூதர்கள், புனிதர்கள், வேதசாட்சிகள் அனைவரும் தூயவர் தூயவர் என்று மூவொரு இறைவனைப் புகழ்ந்து வருகின்றனர் என்பது நமது ஆழமான நம்பிக்கையாகும்.

**மண்ணில்:** படைக்கப்பட்ட உலகில் படைப்பும், மனிதமும் இறைவனைப் பல்வேறு சமயங்கள் நம்பி போற்றி வருகின்றது என்பதை இந்திய மரபு நமக்கு மிகவும் தெளிவாக வெளிப்படுத்தி வருகிறது. கிறிஸ்தவர்களும் புனித தோமையார் காலத்தி-ருந்து நம்பி வருகிறது என்று பெருமிதம் கொள்வோம்.

**முப்பொழுதும்:** முக்காலங்களிலும், எப்பொழுதும் இறைவனைப் புகழ்வது, தொழுவது மனித மரபாகும். கடவுளை மறுப்பவர்கள் கூட தங்களுக்கே உரித்தான விழுமியங்கள் வழியாக இறைவனைப் போற்று கின்றனர். கத்தோ-க்கத் திருச்சபை திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள், இறைமக்கள் வழியாக மூவொரு இறைவனை துவக்கமுதல் இறுதிவரை நம்பி வருகின்றது. நமது நம்பிக்கை நாளும் அவருடைய கிருபையால் வளர்வதாக. நலமாக வாழ்ந்தாலும், நலம் குறைந்தாலும் நமது நம்பிக்கை நம்மைவிட்டு விலகாதிருக்க விழிப்பாய் இருப்போம். கடவுளின் திருவுளத்திற்கும் திட்டத்திற்கும் அன்னை மரியாளைப் போல, இயேசுவைப்போல பணிந்து வாழ்வோம். தாழ்ந்தோரை அவரே உயர்த்துவார் என்று சரணடைவோம்.

## விண்ணக வாழ்வின்

**9–ஆம் ஆண்டு நினைவு** | **33–ஆம் ஆண்டு நினைவு**



மேன்மைமிகு கர்தினால் **D.S.லூர்துசாமி** | பேரருட்திரு சுவாமி **D.S.அமலோற்பவதாஸ்**

நமது அன்புக்கும் பசாத்துக்குரிய அதிமேன்மைமிகு கர்தினால் **D.S.லூர்துசாமி** ஆண்டகை அவர்கள் இறையடி சேர்ந்து, வரும் 02-06-2023 உடன் ஒன்பது ஆண்டு நிறைவடைகின்றன. அவருடைய சகோதரரும், நமது உயர் மறைமாவட்டத்தைச் சேர்ந்தவரும், மைசூர் அஞ்ச- ஆசிரமத்தின் நிறுவனர் - இயக்குநராக பணிபுரிந்தவருமான பேரருட்திரு. சுவாமி **அமலோற்பவதாஸ்** அடிகளார் அவர்கள் இறையடி சேர்ந்து வரும் 25-05-2023 உடன் 33 ஆண்டுகள் நிறைவடைகின்றன. இவர்களுக்காக ஒரு நினைவுத் திருப்ப-, வரும் 03-06-2023 சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு நமது உயர் மறைமாவட்ட பேராலயத்தில் புதுவை-கடலூர் உயர் மறைமாவட்ட பேராயர் மேதகு **பிரான்சிஸ் க-ஸ்ட்** அவர்கள் தலைமையில், மேனாள் சேலம் ஆயர் மேதகு **சிங்கராயர்** அவர்களும் இணைந்து நிறைவேற்றப்படும். அனைவரும் இத்திருப்ப-யில் கலந்துகொண்டு செபிக்க அன்புடன் அழைக்கின்றோம்.

இப்படிக்கு
**குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள்.**

# ஆண்டவன் உலகத்தின் முதலாளி



222

– திரு B. *மேரி ராபர்ட் சாந்திதாஸ், புதுவை–1.*

**வழிப்போக்கனும் வழிக்காட்டியும்:** கோடைக் காலம், சுட்டெரிக்கும் வெயி-ல், வெயி-ன் தாக்கத்தை தடுக்க கையில் குடை பிடித்தவராக ஒருவர் பயணித்துக் கொண்டிருந்தார். அது கிராமப்புறம், சரியான வழி புரியாமல் குழம்பியவர் கண்ணில், சற்று தூரத்தில் இருந்த பண்ணை வீடு கண்ணில்பட்டது. அங்கு இணக்கமான நல்ல மனிதராக தோன்றினார். அவரிடம் தான் செல்லவேண்டிய இடத்திற்கு வழி கேட்டபோது, யோசித்து, சரியான வழி காட்டினார். அவரோடு உரையாடிக் கொண்டிருந்தபோது அந்த மனிதர் இந்த பண்ணை வீட்டின் உரிமையாளர் அல்ல என்றும், உரிமையாளர் வரும்வரை அதை நிர்வாகிக்கும் பொறுப்பாளர் என்பதும் புரிந்தது. பொறுப்பாளர் – ஓர் அருமையான அர்த்தம் பொதிந்த வார்த்தை தனக்கு உரிமையில்லாத ஒரு சொத்தை கண்ணுங்கருத்துமாக பாதுகாத்து பராமரிப்பவர்.

**அழிவைத் தேடும் மனிதன்:** நம்மை சுற்றி பரந்து விரிந்துள்ள இந்த நிலப்பரப்பை உற்று நோக்கினால் ஓர் உண்மை புலப்படும். கடவுள் இவ்வுலகையும் அதில் உள்ள யாவற்றையும் படைத்து, மனிதனையும் படைத்து, இவற்றையெல்லாம் நிர்வகிக்கும் பொறுப்பாளராக நியமித்துள்ளார். ஆனால் மனிதன் என்ன செய்துள்ளான்? தன் சுற்றுச் சூழலை மாற்றியமைத்ததோடு அல்லாமல் அதனை அழித்தும் வருகிறான். காற்று மாசடைந்துள்ளது. நீர் நிலைகள் மாசடைந்துள்ளன. நில அமைப்பும் மாறி எங்கும் நிம்மதியற்ற சூழலே நிலவுகிறது.

நாம் ஆண்டவன் அமைத்து தந்த இந்த உலகின் உண்மையான பொறுப்பாளர்கள் என்றால், நம்முடைய பிள்ளைகளின் பிள்ளைகள், அவர்களின் சந்ததி என்று தலைமுறைகள் தோறும் தொடர்ந்து இந்த இயற்கை சுற்றுச்சூழலை மாசுப்படுத்தாமல் வாழும் முறையை கையாள வேண்டும். நாம் காணும் இந்த பூமி இன்னும் நலமாக இருக்க வேண்டாமா? அப்போதுதான் இந்த பூமியின் சொந்தக்காரர் கடவுளுக்கு உண்மையான மகிழ்ச்சி தரும். நாம் இந்த பூமியில் வந்து தங்கிபோகும் வழிப்போக்கர்கள் என்பதை மறக்கலாகாது, நாம் பொறுப்பாளர்கள்தான், உரிமையாளர்கள் அல்ல.

**சிந்தனைக்கு:** *வானங்கள் இறைவனின் மாட்சிமையை வெளிப்படுத்துகின்றன. வான்வெளி அவர்தம் கைகளின் வேலைப்பாட்டை விவரிக்கின்றது.*

*– திபா 19.1*

# மறைக்கல்வியின் அவசியம்

நாம் நம்மைப் படைத்த கடவுளிடமிருந்து வருகிறோம், அவரிடம் திரும்பி போக வேண்டியவர்களாய் இருக்கிறோம், அவரிடமிருந்தே சகல நன்மைகளையும் அடைகிறோம். அவர் அளவில்லாத சகல நன்மைச் சுரூம் யாயிருக்கிறார், அளவற்ற மடக்கு நம்மைவிட மேலானவர்; அதனால் அவரை அறிந்து, நேசித்து, வணங்கி வழிபடக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆதலால் மதம் அல்லது தெய்வ வழிபாடு அவசியம் நமது சீவியத்திற்கு இன்றியமையாத ஓர் அம்சம், மதம் அவசியமாயின் அதைப்பற்றிய கல்வியும் அவசியமே. ஆகவே மதக்கல்வி அல்லது மறைக்கல்வி அவசியம்.

மறைக்கல்வியின்றி மற்ற கல்விகள் இருந்து பயனில்லை. "கற்றத னாலாய பயன் என் கொல்-வாலறிவன் நற்றாள் தொழா அரெனின்" என்று வள்ளுவர் சொல்வதின் பொருள் யாது? தெய்வ வழிபாடு இல்லையெனில் கற்ற கல்வியால் பயன் ஒன்றுமில்லை. தெய்வ வழிபாடு இல்லாததற்குக் காரணம் மறைக்கல்வி இல்லாமையே. எனவே மறைக் கல்வியின்றேல் மற்றவை வியர்த்தமே, இதுவே வள்ளுவரது கருத்து. நமது உயர்ந்த தத்துவங்கள் புத்தியும் சித்தமும் எனப் பார்த்தோம். புத்தியின் வேலை அறிவது, எதை? உண்மையை. சித்தத்தின் வேலை விரும்புவது, எதை? நன்மையை. அளவில்லாததும், மேலான தும், ஒப்பில்லாததுமான உண்மையும் நன்மையுமாகிய இறைவனை அறிந்து விரும்பாமல், இதர அற்ப சொற்ப உண்மைகளையும் நன்மை களையும் அறிந்து விரும்புவதால் பயன் என்ன? ஒப்புயர்வற்ற உண் மையை அறிய, நிகரில்லா நன்மையை விரும்ப நம்மைத் தயாரிக்கும் மறைக் கல்வியைப் புறக்கணித்து, மற்ற கல்விகளை ஏற்பதினால் பிரயோசனம் யாது? கோட்டையை விட்டுவிட்டு, குடிசையைக் கைப் பற்றுவதைவிட மோசமான செயல் அது,

கடவுள் வழிபாட்டுக்கு வழிகாட்டாக் கல்வி பயனற்றது மட்டு மல்ல; துன்பத் துரிதங்களுக்கும் அழிவுக்கும், அல்லோல கல்லோ லங்களுக்கும் ஆதாரம். உலகில் நிலவும் ஊழல்களும் பாழ்களும்,காணச் சகியாச் சுலகங்களும் கத்திக் குத்துக்களும், கேட்கவொண்ணாக் கேடுகளும் கேவலச் செயல்களும், அளவிடமுடியா ஆபாசங்களும் அட்டகாசங்களும், தாங்கக்கூடாச் சண்டைச் சச்சரவுகளும், இதுபோன்ற சகலமும், அனைத்துக்கும் கர்த்தாவான சாட்சாத் கடவுளை அறிந்து அன்பு செலுத்த மறப்பதினால் அல்லது மறுப்பத்தினால் வரும் மாபெரும் சாபமல்லவா? வேலை நிறுத்தம், ஆலை மூடுதல், உள்நாட்டுக் கலகம், வெளிநாட்டுப் பகை, ஒழுக்கினம், ஒற்றமையின்மை ஆகிய யாவும் ஒழுங்கு ஒற்றுமை, அன்பு அடக்கம், நீதிநட்பு முதலியவற்றின் மூலப் பொருளாகிய முழு முதற் கடவுளை முற்றும் மறந்ததின் விளைவல்லவா? மறைக்கல்வியில்லையேல் இறைவன் வழிபாடு இல்லை - நிறைந்தன உலகில் நிஷ்சேங்கள், நேர்ந்தன.

ஊழல்கள் நீங்கி, உலகம் ஓங்க, நாம் உய்ய, அறம் இருந்தால் போதும், மறை தேவையில்லை, மறைக்கல்வி வேண்டியதில்லை என்பர் சிலர். "மனிதன் நல்லவயை இருந்தால் போதும் மறை அவசியமில்லை மதத்தினால் நாட்டில் பிரிவுகளும் பிளவுகளுந்தான் ஏற்படுகின்றன. ஆதலால் யாவருக்கும் பொதுவான ஒழுக்கமுறை இருந்தால் போதும் மறை வேண்டாம்" என்பது அவர்கள் கூற்று. - இவ்விதம் பிதற்றுவதே பெரும் ஊழல். மறையின்றி அறம் ஓங்காது. மறைக் கல்வியின்றி அறக்கல்வி நிலைக்காது. தனி மனிதனுக்கும், குடும்பத்துக்கும், சமூகத்துக்கும் சமய சஞ்சீவியும், தஞ்சமும் நீதிசெறிப்படி நடக்க உதவியுமாக இருப்பது மறையின்றி வேறு எது?

– கல்வி உரிமைப் போர்

ஆண்டு: 1954

ஆக்கியோன்: சங் டி.எஸ்.லூர்துசாமி

# அருட்தந்தை M.ஆபிரகாம் அடிகளார் இறைவனடி சேர்ந்தார்



**பிறப்பு:** அருட்தந்தை. M. ஆபிரகாம் அவர்கள் திரு. மரியப்பிரகாசம் - திருமதி. பெரியநாயகியம்மாள் ஆகியோரின் அன்பு மகனாக 24-08-1965, திருவதிகுணத்தில் பிறந்தார். 10-09-1965 அன்று திருமுழுக்குப் பெற்றார்.

**படித்த இடங்கள் மற்றும் ஆண்டுகள்:** 1 முதல் 5 வகுப்புகள் திருவதிக்குணத்திலும், 6 முதல் 8 வகுப்புகள் வரை செஞ்சி புனித மைக்கேல் உயர்நிலைப் பள்ளியிலும், 9 முதல் 12 வகுப்புகள் வரை திண்டிவனம், புனித அன்னாள் மேல்நிலைப்பள்ளியிலும் பயின்றார்.

**குருத்துவ பயிற்சி:** 1985 -இல் கடலூர், புனித ஆக்னஸ் இளங்குருமடத்தில் லத்தீன் பயின்றார். 1986 - 1988 வரை பெங்களூர், புனித பேதுரு பாப்பிறை குருமடத்தில் தத்துவவியலும், 1990 - 1993 வரை புனித பேதுரு பாப்பிறை குருமடத்தில் இறையியலும் பயின்றார்.

**குருத்துவ அருட்பொழிவு:** 25 மே 1993, திருவதிகுணம், புனித சூசையப்பர் ஆலயத்தில், மேதகு மைக்கேல் அகஸ்டின் அவர்களால் குருவாக திருப்பொழிவு செய்யப்பட்டார்.

**பணியிடங்கள்:** 15-06-1993 முதல் 05-06-1994 வரை காரைக்காலில் உதவி பங்குத்தந்தையாகவும், 08-06-1994 - மே 1995 வரை முகையூர் பங்கின் உதவி பங்குத்தந்தையாகவும், 10-06-1995 முதல் ஜூன். 1996 மரக்காணம் பங்கின் பங்குத் தந்தையாகவும், 26-06-1996 முதல் ஜூன் 1997 வரை T.அத்திப்பாக்கம் பங்குத்தந்தையாகவும் பணியாற்றினார்.

பின்னர் 17-06-1997 முதல் 10-08-2003 வரை சத்தியமங்கலம் பங்குத்தந்தையாகவும், ஆகஸ்ட் 2003 முதல் ஜூலை 2004 வரை ரெட்டியார்பாளையம், புனித போப் ஜான் பால் II கல்வியியல் கல்லூரியில் பி. எட் படித்தார். 10-09-2004 முதல் 03-06-2007 வரை ஒதியத்தூர் பங்குத்தந்தையாகவும், தலைமை ஆசிரியர் மற்றும் தாளாளராகவும் பணியாற்றினார். 04-06-2007 முதல் 31-05-2008 வரை ஆசிய கிறிஸ்தவ படிப்பு. 01-06-2008 முதல் 31-05-2009 வரை வெள்ளகுளம் பங்குத்தந்தையாகவும், 01-06-2009 முதல் 31-05-2010 வரை விழுப்புரம், MRIC மேல்நிலைப்பள்ளியில் ஆசிரியராகவும், 09-06-2010 முதல் 31-05-2011 வரை புதுச்சேரி பெத்தி செமினேர் துணைமுதல்வாராகவும் பணியாற்றினார்.

ஜூன் 2011 முதல் 31-05-2012 வரை மருத்துவ விடுமுறையில் இருந்தார். பின்னர் 01-06-2012 முதல் 14-07-2018 வரை தெற்குணம் பங்குத்தந்தையாகவும், 15-07-2018 முதல் 31-05-2019 மருத்துவ விடுப்பிலும் இருந்தார். 01-06-2019 முதல் திண்டிவனம், புனித அன்னாள் மேல்நிலைப்பள்ளி, உள்விடுதியில் ஆன்மிக இயக்குநராக பணியாற்றி வந்தார்.

**இறப்பும் அடக்கமும்:** உடல்நலக் குறைவினால் திண்டிவனம் புனித பிலோமினாள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், 16 மே 2023 செவ்வாய் அன்று மாலை 4.30 மணிக்கு இறைவனடி சேர்ந்தார். 17.05.2023 புதன் அன்று மாலை 3.30 மணிக்கு புதுவை புனித ஜென்மராக்கினி அன்னை பேராலயத்தில், செங்கை மறைமாவட்ட ஆயர் மேதகு நீதிநாதன் அவர்களால் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. முதன்மை குரு அருட்தந்தை குழந்தைசாமி அவர்கள், "அருட்தந்தையின் இழப்பு நம் உயர்மறைமாவட்டத்திற்கு பேரிழப்பு, நம்மை வருத்தமடையச் செய்கிறது. அருட்தந்தை அவர்கள் தனது குருத்துவ பணியில் 30 ஆண்டுகள் சிறப்பாக பணியாற்றியிருக்கிறார். குருமடத்தில் படிக்கின்ற காலங்களில் மிகச்சிறந்த மாணவராக திகழ்ந்தார். அவரை நாம் இழந்திருப்பது வருத்தமாகும்" என்று கூறினார்.

நமது பேராயர் அவர்களால் இந்த அடக்கத்திருப்பலியில் கலந்துகொள்ள இயலவில்லையென்றாலும் அவர் தனது இரங்கல் செய்தியை அனுப்பியிருந்தார், "அருட்தந்தை. M. ஆபிரகாம் அவர்களின் இறப்புச் செய்தியைக் கேள்வியுற்று நான் மிகவும் வருத்தமுற்றேன், அவருக்காக திருப்பலி ஒப்புக்கொடுத்து செபித்தேன். மேதகு நீதிநாதன் அவர்கள் திருப்பலி நிறைவேற்ற ஒப்புக்கொண்டது ஆறுதலை அளிக்கிறது. அருட்தந்தையின் ஆன்ம இளைப்பாற்றிக்காக நான் செபிக்கிறேன்" என்று கூறியிருந்தார்.

மறையுரையில் அருட்தந்தை M. ஆபிரகாம் அவர்களின் உறவினர் அருட்தந்தை. செபஸ்டின் வனத்தையன் SDB அவர்கள், "ஒவ்வொரு நாளும் பல இறப்புகள் நடைபெறுகின்றன. ஆனால் ஒருசில இறப்புகள் நம்மை வெகுவாக பாதிக்கின்றன. அந்த வகையில் அருட்தந்தையின் இறப்பு நம் அனைவரையும் மிகவும் பாதித்திருக்கிறது. 44 நாட்களுக்கு முன்புதான் நான் அருட்தந்தையின் தந்தையின் அடக்கத்திற்கு நான் மறையுரை ஆற்றினேன். ஆனால் இவ்வளவு சீக்கிரம் அவருடைய இறப்பிற்கு மறையுரை ஆற்றுவேன் என்று சிறிதும் எதிர்பார்க்கவில்லை. அருட்தந்தை அவர்களுக்கு இந்த மறைமாவட்டம் பல்வேறு வாய்ப்புக்களை கொடுத்திருந்தது, அதற்காக நான் மறைமாவட்டத்திற்கு நன்றி கூறுகிறேன். தந்தை அவர்கள் தன் பணியில் வெகு சிறப்பாக செயல்பட்டார். "நாம் இவ்வுலகில் குடியிருக்கும் உடலாகிய கூடாரம் அழிந்து போனாலும் கடவுளிடமிருந்த கிடைக்கும் வீடு ஒன்று விண்ணுலகில் நமக்கு உண்டு. அது மனிதக் கையால் கட்டப்படாதது, நிலையானது என்பது நமக்குத் தெரியும் அல்லவா." (2கொரி 5: 1) எனவே நாம் விண்ணகத்தை நோக்கியே பயணம் செய்கிறோம். ஒவ்வொரு இறப்பும் நமக்கு நம் உயிர்ப்பை நினைவுப் படுத்துகிறது, எனவே வாழும் காலம் முழுவதும் நாம் ஒவ்வொருவரும் வாழும் அருளடையாளங்களாக வாழ்வோம். அருட்தந்தை அவர்களை கடவுள் தன் நற்செய்தியின் கருவியாக பயன்படுத்தியதற்கு நாம் இறைவனுக்கு நன்றி கூறி தந்தையை இறைவனிடம் ஒப்படைப்போம்" என்று மறையுரை ஆற்றினார்.

அருட்தந்தை பிலோமின்தாஸ் அவர்கள் திருப்பலி நிறைவேற்றிய ஆயருக்கும், அருட்பணியாளர்களுக்கும் மற்றும் துறவியர், இறைமக்கள் அனைவருக்கும் நன்றி கூறினார்.

திருப்பலிக்குப்பின் அருட்தந்தையின் உடலானது குருக்கள் கல்லறையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. ஏறக்குறைய 70க்கும் மேற்பட்ட குருக்களும், அருட்கன்னியரும் மற்றும் இறைமக்களும் அருட்தந்தையில் நல்லடக்கத் திருப்பலியில் கலந்துகொண்டு செபித்தார்கள். ***நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும் ஆண்டவரே, முடிவில்லாத ஒளி அவர்மேல் ஒளிர்வதாக.***



## 38 ஒரு குரு தன் சகோதர குருக்களுக்கு...

அருட்பணி பியர் கையே MEP

தமிழாக்கம் Dr.Sr.M.லில்லி மரி ME, புதுச்சேரி.

அவர்கள் கடமையைச் செய்வதில் மேலும் மேலும் தவறும்போதும், அவர்களுடைய அற்பப்பாவங்களின் எண்ணிக்கை பெருகும்போதும், அவர்களுடைய மனச்சான்று தூங்கும் போதும், கருமேகம் அவர்களுடைய ஆன்மாக்களை எல்லாப் பக்கங்களிலிருந்தும் சூழ்ந்து ஆபத்தை நோக்கி விரைவாகத் தள்ளுவதுபோலும் இருக்கும். நமது கண்களுக்கு அந்த ஆபத்து தெரியும். அவர்களோ இவ்வாறு குருடர்களாக இருக்கிறார்கள்.

நீங்கள் ஆன்மிகக் குருட்டுத்தன்மை பற்றியும் இதயம் கடினப்படுவது பற்றியும் கேள்விப்பட்டிருப்பீர்கள். அது அற்பப்பாவங்களை விரும்புவதாக இருக்கலாம். அதை மீண்டும் மீண்டும் கட்டிக்கொள்ளும்போது இப்படிப்பட்ட அழிவைக் கொண்டுவருகிறது.

இந்த அபாயத்தை விலக்குவோம். நமது மனச்சான்றை விழித்தெழச் செய்வோம். அதை மீண்டும் விடுதலையாக்குவோம். அதனுடைய தீமைகளைத் திருத்துவோம். ஒருபோதும் இறையருளை எதிர்த்து நிற்க வேண்டாம். மாற்றி அமைக்கப்பட்ட மனச்சான்றின் குரலையும் எதிர்க்க வேண்டாம். சிறு காரியங்களில்கூட எதிர்க்க வேண்டாம். தூயதோர் இதயத்தை என்னுள் படைத்தருளும் இறைவா, சரியான ஆவியை என்னுள் புதுப்பித்தருளும் என்னை முழுவதும் புதுப்பித்தருளும்.

### அதிகாரம் 10: அற்பப்பாவங்கள் மன உறுதியை வலுவிழக்கச் செய்கின்றன.

சிறு காரியங்களில் திருப்திகொள்பவன் சிறிது சிறிதாக வீழ்ச்சியடைவான்.

நான் ஏற்கனவே உங்களுக்குக் கூறியுள்ளேன்: அற்பப்பாவம் நமது பகுத்தறிவைக் குருடாக்கி சரியான தீர்ப்பு செய்ய தகுதியற்றதாக்குகிறது.

இப்போது அது நம் விருப்பத்தில் (will) ஏற்படுத்தும் விளைவுகளைப் பார்ப்போம். தடைகளை மேற்கொண்டு, தீமையை விலக்கி நன்மையைத் தேர்ந்துகொள்ளும் ஆற்றலை இறைபராமரிப்பு மனிதனுக்கு வழங்கியுள்ளது.

நமது இறையியல் கூறுகிறது: மீட்பு இரு விருப்பங்களைச் சார்ந்துள்ளது: இறைவிருப்பம், மனித விருப்பம். இவை இரண்டின் பொது முயற்சியின் விளைவு என்பதுபோல இரண்டும் மிகவும் விரும்பத்தக்க முடிவைக்கொண்டுவர போட்டியிடுகின்றன. கடவுள் மனிதனுக்கு அருளை வழங்குகிறார். ஆனால் மனிதன் அதனோடு ஒத்துழைக்க வேண்டும்.

நாம் தனித்துவிடப்பட்டால் இறை உதவியின்றி நம்மால் நல்லது எதுவும் செய்ய இயலாது. நம்மையே நாம் மீட்டுக்கொள்ள முடியாது. நமது ஆண்டவர் சொல்கிறார் "என்னையன்றி உங்களால் எதுவும் செய்ய முடியாது." முழுமையான பலன் தர நமக்கு இறையருள் தேவை.



Fr.Gayet

வேறுவகைகளில் சொல்ல வேண்டுமென்றால், இறையருள் மட்டும் நம்மை விண்ணுலகுக்கு எடுத்துச் செல்ல முடியாது. "நமது அனுமதியின்றி நம்மைப் படைத்த இறைவன் நமது ஒத்துழைப்பின்றி நம்மை மீட்க முடியாது." என்று புனித அகுஸ்தினார் கூறுகிறார்.

மனிதன் தன்னை மீட்டுக்கொள்ள வேண்டுமென்றால் அவன் வருந்தி உழைக்க வேண்டும், செயல்பட வேண்டும். தன் முழு பலத்தையும் பயன்படுத்தி உழைக்க வேண்டும். அருளின் தூண்டுதலுக்குக் கீழ்படிய வேண்டும். கட்டளையிட்டதைச் செய்து, தடுக்கப்பட்டதை விலக்க வேண்டும். அவன் எந்த முயற்சியும் எடுக்கவில்லையென்றால் இறையருள் அவன் மீது அருவிபோலப் பொழியப்பட்டாலும் அது பயனின்றி அவன் காலடியில் கொட்டிச் சிதறும். அந்த அருள் கிடைத்ததற்கான எந்த அடையாளத்தையும் விட்டுச் செல்லாது.

விருப்பம்தான் நமக்குக் கட்டளையிட்டு முயற்சி எடுக்க நமக்குத் திணிக்கிறது. தூய ஆவியின் ஆலோசனைகளைப் பின்பற்ற கட்டாயப்படுத்துகிறது. எனவே நேர்மையான விருப்பத்தைக் கொண்டிருப்பது எவ்வளவு மேலானதும் முக்கியமானதும் என்று புரிந்துகொள்வது எளிது, உறுதியான விருப்பம், இரும்புமனம், இறுதிவரை நடத்திச் செல்லும் மனம் அவசியம் என்றும் புரிகிறது.

கடவுள் சுலபமானதையும் பிடித்தமானதையும் தவிர வேறு எதையும் நமக்குக் கட்டளையிடவில்லை. நமது கடமை எப்போதும் நமது இயல்பான நாட்டங்களுக்கு ஒத்துவருவதாக இருந்தால் மீட்பும் புனிதமும் உலகிலேயே ஒருவர் செய்யக் கூடிய மிக எளிதான ஒன்றாக இருக்கும். அந்த நிலையில் வானகத்தைப் பரிசாகப் பெற ஒருவர் இயல்பான ஆற்றலோடும் அருளோடும் இணைந்து உழைத்தால் போதும். அதைத் தவிர்த்து விருப்பத்துக்கு வேறு வேலை இல்லை. ஒருவர் பலசாலியாகவோ பலவீனராகவோ இருப்பதால் எந்த விளைவும் இல்லை. துரதிருஷ்டவசமாக, அவ்வாறு இருப்பதில்லை, அதற்கு மிகவும் தொலையில் உள்ளது. நமது தெய்வீக எஜமானர் "நீங்கள் என்னைப் பின்பற்ற விரும்பினால் சிரமம் எடுத்துக்கொள்ளாதீர்கள், எல்லாவற்றையும் சுலபமாக எடுத்துக்கொள்ளுங்கள், உங்களுடைய ஆசைகளுக்கு ஏற்றவாறு நடந்துகொள்ளுங்கள், உங்கள் உடலும், புலன்களும் கேட்பதையெல்லாம் கொடுங்கள். பூமியிலுள்ள எல்லாக் கனிகளையும் சுவையுங்கள், சுலபமானதும் சொகுசானதுமான வாழ்க்கையை நடத்துங்கள், வாழ்வின் முடிவில் வானகம் உங்களுக்குக் கிடைக்கும்" என்று சொல்லவில்லை.

இதற்கு நேர்மாறானதைத்தான் சொன்னார் "இறையரசு பலவந்தம் செய்யப்படுகிறது. பலவந்தம் செய்கிறவர்கள் அதைக் கைப்பற்றிக்கொள்கிறார்கள், இறையரசு வன்முறையால் தாக்கப்படுகிறது. பலத்தால் அது கைப்பற்றிக் கொள்ளப்படுகிறது. என்னை யாராவது பின்பற்ற விரும்பினால் அவர் தன்னலம் துறந்து, தன் சிலுவையைச் சுமந்துகொண்டு என்னைப் பின்தொடரட்டும்,"

➡ தொடரும்





## நுனிப் புல்

- திரு. அல்போன்ஸ் மோசஸ்
புதுச்சேரி-9.

மலைவாழ் மக்களில் ஒருசிலர் தங்களுக்குக் கிடைத்த காட்டுத் தேனை விற்பதற்காக முதல் முறை நகரத்திற்குள் பிரவேசித்தனர். அங்கு காணப்பட்ட வானளாவிய கட்டிடங்கள், அழகு வேலைப்பாடுகள் கொண்ட கோவில் கோபுரங்கள் போன்றவற்றைக் கண் சிமிட்டாமல் பார்த்து அசந்து போயினர்.

மேலும் அழகு மலர்கள் பூத்துக் குலுங்கிய ஒரு பூங்காவையும் பார்த்தனர். அங்கு தோட்டக்காரன் குழாய் மூலம் செடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருப்பதையும் பார்த்தனர். அதற்கு கொஞ்ச தூரத்தில் ஒரு குழாய் இருந்தது. குழாயைத் திருகியதும் தண்ணீர் வருவதைப் பார்த்து ஆச்சரியப்பட்டனர்.

“என்னடா இது நம்ம காட்டுல தண்ணீ எடுக்க பல மைல் தூரம் அலைய வேண்டியிருக்கு. இங்க இந்த குழாயைத் திருகியதும் தண்ணீர் அருவி போல கொட்டுகிறதே” என்று எண்ணி வியந்தனர். வந்த களைப்பிற்கும் வெயிலின் கொடுமைக்கும் அந்த குழாயில் தங்களை நனைத்து ஆனந்தம் கண்டனர்

தேனை விற்று முடிக்க இரவு ஆகிவிட்டது. திரும்பி காட்டுக்குப் போகும் போது அவர்களில் ஒருவன் இந்த குழாயை நாம் எடுத்துக் கொண்டு காட்டுக்குப் போய் வைத்துக்கொண்டால் நமக்கு தேவையான நேரத்தில் தண்ணீர் கிடைக்கும் என்று எண்ணி அதை பிடுங்க முயற்சித்தான். ஆனால் அதனோடு இணைக்கப்பட்ட குழாயிலிருந்து தண்ணீர் பீரிட்டு அடிக்க ஆரம்பித்ததும் பயந்துபோய் அங்கிருந்து ஓட ஆரம்பித்தான்.

இப்படித்தான் நம்மில் சிலர் நுனிப்புல் மேய்வது போல அதிகமாக சிந்திக்காமல் கண்ணில்பட்டதை மட்டும் கருத்தில் கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

ஒரு செயல்பாட்டில் இறங்கினால் அதைப் பற்றிய அனைத்து விவரங்களையும் அலசி ஆராய வேண்டும். அதனால் ஏற்படும் பின்விளைவுகள் எந்த அளவிற்கு நமக்கு சாதகமாகவும் பாதகமாகவும் அமையக்கூடும் என்பதை முன்கூட்டியே ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

அவசர கதியில் எதையும் ஆரம்பிக்கக் கூடாது. நிதானமாக சிந்தித்து செயல்பட வேண்டும். நம்மால் முடியவில்லை என்றால் பிறரது ஆலோசனையைக்கூட கேட்கலாம். அவர்கள் தங்களது அனுபவத்தில் கூறுபவை மிகவும் பயனுள்ளதாக அமையும். அப்போது நாம் எதிர்பார்க்கும் முடிவு நமக்கு சாதகமாக அமையும். ●

மிஷன் அச்சக புதிய புத்தக விற்பனை

**உத்தரிக்கும் ஆன்மாக்களோடு எனது அனுபவங்கள்** -மரிய சிம்மா

விலை ரூ.100

தமிழாக்கம்
**அருட்பணி அ. ஆரோக்கியராஜ்,** முதல்வர்,
புனித புனித அந்தோணியார் மேல்நிலைப் பள்ளி,
மேல் நாரியப்பனூர்.

தபால் செலவு தனி

## அனுபவம் புதுமை!

1 -தொடர்ச்சி



திரு. ஜெயராஜ் தானியேல்,
முத்தியால்பேட்டை, புதுவை-3

மாமறையூரில் வசித்து வந்த செல்வராஜ் பத்து கிலோமீட்டருக்கு அப்பாலிருக்கும் ஒரு தனியார் தொழிற்சாலையில் வெல்டிங் வேலை செய்து வந்தார். தொழிலில் நல்லபெயர் வாங்கியிருந்தும் அவருடைய குடிப்பழக்கத்தால் இயற்பெயர் மறைந்து ‘குடிகாரன்’ என்ற பெயரே நிலைத்துவிட்டது. நாளடைவில் அவருடைய குடும்பமே நடுத்தெருவுக்கு வந்துவிடும் நிலை. எப்படியாவது செல்வராஜின் குடிப்பழக்கத்தை நிறுத்திவிட வேண்டும் என்று பிரயாசைப்பட்டார் மனைவி ரெஜினா. தவக்காலம் வந்தது. பங்குக்கோயிலில் ஒருநாள் தியானம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கணவரைக் கெஞ்சி கூத்தாடி தியானத்தில் பங்கெடுக்கச் செய்தார் ரெஜினா.

தியானத்தை வழிநடத்த வந்த குருவானவர் இயேசுவின் திருப்பாடுகள் எதற்காக, அவை சொல்லும் நற்செய்தி என்ன, இயேசுவின் விலைமதிப்பற்ற இரத்தத்தைக் கொண்டு நமக்கு ஏற்படும் சோதனைகளை எவ்வாறு வெல்வது போன்ற கருத்துகளை பலவித எடுத்துக்காட்டுகளுடன் விளக்கினார். ஜெபமாலை என்பது ஒவ்வொரு கிறிஸ்தவன் கையிலும் உள்ள ஓர் ஆயுதம் என்று ஆதாரங்களோடு விளக்கினார். தியானத்தின் பொழுது நடந்த ஒப்புரவு அருட்சாதன நிகழ்வில் பங்குகொண்டு குருவானவரின் அறிவுரை கலந்த அருளாசியோடு வீடு திரும்பினார் செல்வராஜ்.

“குடிகாரரான தொழிலாளர்கள் செல்வர்களாக முடியாது” என்ற சீராக்கின் (19:1) ஞானத்தை நினைவிலிறுத்தி, இயேசு கிறிஸ்துவின் வல்லமையான நாமத்தினாலும், அவர் எனக்காக சிந்திய ஜெயங்கொண்ட கல்வாரி இரத்தத்தினாலும் இந்தக் குடிப்பழக்கத்தைக் கைவிட முடிவு செய்கிறேன்” என்று முதற்படியாக மனதில் கங்கணம் கட்டிக் கொண்டார்.

மறுநாள் மாலை பணிமுடிந்து வந்ததும் குடும்ப ஜெபத்தில் கலந்துகொண்டு ஜெபமாலை சொல்லி ஒப்புக்கொடுத்தார். வழக்கமாக மது அருந்திவிட்டு வீடு திரும்பும் கணவன் இப்பொழுது குடும்ப ஜெபத்தில் கலந்துகொண்டு ஜெபமாலை சொன்னதைக் கண்ட மனைவி அன்னைமரியாளுக்கு நன்றியாக திருப்பலி ஒப்புக்கொடுத்தார். இப்படியே தொடர்ந்து குடும்பத்தோடு சேர்ந்து ஜெபித்தார். நாளடைவில் செல்வராஜ் குடிப்பழக்கத்தை அடியோடு நிறுத்திவிட்டார். அதைக் கேள்வியுற்ற நண்பர்கள் உறவினர்கள் அனைவரும் வாயடைத்துப் போனார்கள். ‘குடிகாரன்’ என்ற அவப்பெயரும் மறைந்து போனது.

நடந்தது ஒரு புதுமை என்பது செல்வராஜைத் தவிர வேறு யாருக்கும் தெரிய வாய்ப்பில்லை. அவர் பங்குக்குருவிடம் சென்று தனக்கு ஏற்பட்ட அனுபவத்தை விவரித்தார்.

ஒவ்வொரு நாளும் அவருக்குள் எழுந்த சபலத்தை முதலில் வெல்ல முடியாமல் தவித்ததையும் பிறகு ஜெபமாலையைக் கையிலெடுத்து ‘மரியே வாழ்க! மரியே வாழ்க!’ என்று ஓயாமல் துதித்து ‘குடிக்க’ வேண்டும் என்ற எண்ணத்தை ஒழித்த விதத்தையும் கூறினார். மேலும் மற்ற குடிகாரர்கள் மனம் மாறுவதற்காக நாள்தோறும் இறை இரக்கத்தின் ஜெபமாலை சொல்லி ஒப்புக்கொடுப்பதாகவும் தெரிவித்தார். இதைக் கேட்ட பங்குக்குரு மூவொரு தேவனுக்கும் தேவதாய்க்கும் நன்றி சொல்லி துதித்து ஆசீர்வதித்து அனுப்பினார்.

➡ - தொடரும்



# "நல்ல பங்கை தேர்ந்தெடுத்துக் கொள்வோம்"

சகோ. அ. ஆரோக்கியதாஸ்
திண்டிவனம்.

சென்ற இதழ் தொடர்ச்சி

வீடு தேடி வந்தவருடன் நலம் விசாரித்து பின் அவரைச் சார்ந்தவர்கள். வீட்டில் உள்ளவர்களின் நலன்கள், பிள்ளைகள், குடும்ப சூழல் பற்றி அக்கறையோடு ஒருவர் ஒருவரோடு உரையாடுதல்தான் மிகமிக முக்கியம்.

இந்த முறையில், வீட்டுக்கு வந்த இயேசுவை வரவேற்ற மார்த்தா, வந்தவருக்கு உணவு சமைக்க உள்ளே சென்றாள். இயேசுவின் பணி வாழ்வில் பெத்தானியா என்ற ஊருக்கு செல்லும் போதெல்லாம், இந்த மார்த்தா வீட்டுக்கு செல்வது வழக்கம். மார்த்தாவும் அவருடைய சகோதரியான மரியாவும், பெத்தானியாவில் வாழ்ந்தார்கள். அவர்களுக்கு இலாசர் என்ற சகோதரரும் உண்டு. இந்த இலாசர் நோயுற்றிருந்தபோது இந்த மார்த்தாவும் மரியாவும், இயேசுவிடம் ஆளனுப்பி நோயுற்றிருப்பதை தெரிவித்தார்கள். இதைக் கேட்டு இயேசு "இந்நோய் சாவில் போய் முடியாது. கடவுளின் மாட்சி விளங்கவே இவன் நோயுற்றான், இதனால் மானிட மகனும் மாட்சி பெறுவார்" என்று கூறி, உடனே புறப்பட்டு வராமல் இன்னும் இரண்டு நாள் அங்கேயே தங்கியிருந்தார். நான்கு நாட்களுக்குப் பின் கல்லறைக்கு அருகில் சென்று "தந்தையே நீரே என்னை அனுப்பினீர் என்று சூழ்ந்து நிற்கும் இக்கூட்டம் நம்பும் பொருட்டே என் வேண்டுதலுக்குச் செவி சாய்க்கிறீர் என்று எனக்கு தெரியும்" என்று சொல்லி, உரத்த குரலில் "இலாசரே வெளியே வா" என்று கூறி, இலாசரை உயிரேடு எழுப்பினார். இவரின் சகோதரி இந்த மரியாதான் இலாமிச்சை என்னும் கலப்பற்ற விலையுயர்ந்த நறுமணத்தைலம் கொண்டு வந்து இதே பெத்தானியாவில் சீமோன் இல்லத்தில் பந்தியில் அமர்ந்திருந்த போது இயேசுவின் காலடியில் பூசி அதனைத் தமது கூந்தலால் துடைத்தார்.

அந்த மரியா தான் இயேசுவினுடைய காலடியில் அமர்ந்து அவர் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தார். மார்த்தா மூத்தவர் என்ற நிலையில் தனது தங்கை மரியா, வந்துள்ள விருந்தினருக்கு பசி ஆற்ற உணவு தயாரிப்பதில் தனக்கு உதவி செய்யாமல் இருப்பதால் அவர்மேல் கோபம், தான் ஒருவளே சமையல் பணியில் அனைத்து வேலைகளையும் செய்ய வேண்டியுள்ளது. இந்த தங்கை அங்கே இயேசுவோடு, வந்துள்ளவரோடு வீண் கதை பேசுகிறாளே என்பது மட்டுமல்ல, இயேசுவுடன் தேவையில்லாமல் பேசிக்கொண்டு இருக்கிறாளே என்ற கோபம். அடுத்து இந்த இயேசுவும் அவளுடன் கதை பேசுவதில் ஆர்வம் காட்டுகிறார். தன் மேல் இரக்கம் வைத்து, உன் சகோதரிக்கு உணவு தயாரிப்பதில் தனித்து துன்பப்படுகிறார் என்பதால் போய் அவளுக்கு உதவியாக இருக்க சொல்லாமல் இருக்கிறாரே என்ற நோக்கத்தில், பொறுத்திருந்து பார்த்து. ஏன் தான் மட்டும் துன்பப் படவேண்டும் என்று நினைத்து மார்த்தாளே தனது பணிகளின் இடையிலேயே இயேசுவிடம் வந்து "ஆண்டவரே தான் பணிவிடை செய்ய என் சகோதரி என்னைத் தனியே விட்டுவிட்டாளே, உமக்கு கவலையில்லையா? எனக்கு உதவிபுரிய அவளிடம் சொல்லும்" என்றார்.

உடனே இயேசு மரியாவை தன் சகோதரி மார்த்தாவுக்கு உதவி செய்ய அனுப்பியிருக்கலாம். அவர் பேசிக்கொண்டு இருப்பதை நிறுத்தி இருக்கலாம். உணவு தயாரிக்கப்பட்டுவிட்டால் உணவருந்தி வேறு இடத்திற்கு நற்செய்தி அறிவிக்க சென்றிருக்கலாம். ஆனால் மரியாவை சகோதரிக்கு உதவிசெய்ய அனுப்பவில்லை.

மாறாக தனக்கு உதவிசெய்ய அனுப்பும்படி கேட்ட மார்த்தாவிடமே இயேசு "மார்த்தா, மார்த்தா, நீ பலவற்றைப் பற்றிக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய். ஆனால் தேவையானது ஒன்றே. மரியாவோ நல்ல பங்கைத் தேர்ந்தெடுத்துக்கொண்டாள். அது அவளிடமிருந்து எடுக்கப்பட்டாது" என்றார்.

தனக்கு உதவி செய்ய மரியாவுக்கு அறிவுரை கூறி அனுப்ப சொன்னால் இயேசு தான் செய்யும் பணியை குறை கூறியும் அவருக்கு உணவு சமைப்பது, தேவையானது அல்ல என்பது மட்டும் அல்ல. தங்கை தனக்கு உதவி செய்யாமல் தனியே விட்டுவிட்டு அவர் பாதத்தில் அமர்ந்து அவர் சொல்வதைக் கேட்பது நல்ல பங்கு என்றும், அவள் தேர்ந்து கொண்ட இந்த பணி யிலிருந்து, அந்த கேட்டுக் கொண்டிருக்கும் ஆர்வத்திலிருந்து அவளைப் பிரிக்க முடியாது என்றும், இந்த கேட்கும் செயல்தான் நல்லது மட்மல்ல, தேவையானதும் கூட என்கிறார் என்று வருத்தப்பட்டு இருப்பார் என்றாலும், போதகர் சொல்லிவிட்டார். ஆயினும் வீட்டுக்கு வந்த அவருக்கு உணவு பரிமாறுவது வீட்டுக்கு பெரியவர் பொறுப்பு என்று தொடர்ந்து சமையல் பணியில் ஈடுபட்டிருப்பாள்.

➡ தொடரும்...

---

**விண்ணக வாழ்வின்**
**27-ம் ஆண்டு நினைவு அஞ்சலி**

தோற்றம்: 02-06-1972



மறைவு: 03-06-1996

**Y.ஜோசப் பாண்டியராஜன் B.A.**

"துணிவுடன் இருங்கள், நான் உலகின்மீது வெற்றிகொண்டுவிட்டேன்" - யோவா 16:33

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 3-6-2023 காலை 6.15 மணிக்கு புதுவை, தாகூர் நகர் பங்கு, தூய ஆவியார் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்படும்.

பிரிவால் துயருறும்

அப்பா: S. இயேசு
அண்ணன்கள், அண்ணிகள்,
தம்பி - தம்பி மனைவி.
தாகூர் நகர்.



# "குடும்ப வாழ்வில் செபம்"

திரு. அ. குழந்தைராஜ்
காரைக்குடி.

சென்ற இதழ் தொடர்ச்சி...

குடும்ப ஜெபம் குடும்ப உறுப்பினர்களின் உறவை பிணைக்கிறது இடைவிடாமலும் ( லூக் 16:5-8) தாழ்ச்சி உள்ளத்தோடும் (லூக் 18:10-14) கேட்டதைப் பெற்றுக்கொண்டோம் என்ற மனநிலையிலும் (மாற் 11:24) எதிரிகளை மன்னித்தும் (மத் 18:21-35) பிறர்புகழ வேண்டும் என்றெண்ணாமலும் (மத் 6:5-8) கவனத்தோடும் (மாற் 13:33 சிதறிப்போன ஆடுகளுக்காகவும் (மத் 9:36-38) அன்றாடத் தேவை களுக்காவும் (மத். 6:11 சோதனை களை மேற்கொள்ளவும் (மத் 5:13) தூய ஆவியானவரின் வல்லமையால் நிரப்பப்படவேண்டும் என்றும் (லூக் 11:13) நாம் ஜெபிக்க வேண்டும்.

மேலும் ஒரு குடும்பத்தில் 60-80 வயதுள்ள தாத்தா பாட்டி 30-45 வயதுள்ள அம்மா-அப்பா 5-10 வயதுள்ள சிறுகுழந்தைகள் இவர்கள் அனைவரும் சேர்ந்து ஜெபிக்கும் போது, எல்லா நிலைகள், வயதினர், தேவைகள் ஒருவர் அறிந்து கொள்ளும் வாய்ப்பு, ஒரு சாராருக்காக, பிற சாராரின் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையை, குடும்ப ஜெபத்தில் அறிந்து கொள்ள லாம். மேலும் ஒருவர் ஒருவருக்காக ஜெபித்து இறைவனின் அருளையும் ஆசீரையும் பெறலாம். ஆபிரகாம் சோதோமின் அழிவிலிருந்து காப்பாற்றவும் (தொ. நு 18:23-32) மோசே இஸ்ரேயலுக்காகவும் (வி.ப.32:11-14) சாலமோன் ஆலய அர்ச்சிப்பு சமயத்திலும் (1.அர 8:30-36) இஸ்ராயேலரின் பாவங்களுக்காக தானியேலும் (தானி 9:3-19) சிலுவையில் அறைந்தவர் களுக்காக இயேசுவும் (லூக் 23:34) தன்னைக் கல்லால் எறிந்தவர்களுக் காக ஸ்தேவானும் (தி. பணி 7:50) சமாரியர்களுக்காக பேதுருவும் யோவானும் (தி.பணி 8:15) பேதுரு வுக்காக திருச்சபையும் (தி.பணி 12:5) பரிசுத்த ஆவியார் இறைமக்களுக் காகவும் (ரோ 6:25-27) ஜெபித்ததைப் போல குடும்பத்திலும் ஒருவர் ஒருவருக்காக ஜெபிக்கலாம், உதவலாம், விட்டுக் கொடுக்கலாம், அன்பைப் பொழியலாம்.

ஆவியின் கனிகளாகிய "அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், விசுவாசம், சாந்தம், தன்னடக்கம், மரியாதை இச்சை யடக்கம், கற்பு" போன்றவைகளை ஒரு தனிமனிதன், சமூகத்திற்குச் சென்று பணிபுரிவதற்கு முன், அந்தப் பரிசோதனைகளை முதலில் பரிட் சார்த்தமாக, சோதித்து, நிறைகுறை களைக் கண்டு பயிற்சி பெறும் இடம் குடும்பமே. குடும்பத்தில் இவை களைச் செய்யாமல் விட்டுவிட்டு வெளிவேட மணிந்த கபட நாடகக் காரர்களைப் போல வாழ்வதுதான் பரிசேயத்தனம். ஏனெனில் பரிசேயர்கள் சொல்வார்கள், போதிப்பார்கள், ஆனால் செய்ய மாட்டார்கள்.

பொதுவுடமைக் கருத்துக்கள் 1917 வாக்கில் ரஷ்யா மூலமாக உலகிற்கு வந்து, அன்னை பாத்திமாவில் காட்சி கொடுத்தபோது சொன்ன "ரஷ்யாவுக்காக செபியுங்கள்" என்றபடி, கத்தோலிக்க உலகமே செபித்தது. அன்னையின் கூற்றுப்படி 1990ல் ரஷ்யா. அமைதியாக, ரத்தம் சிந்தாமல், சலசலப்பில்லாமல் 16 துண்டுகளாக உடைந்தது. ரஷ்யா, சீனா, போலந்து (திருத்தந்தை பிறந்த நாடு ரூமேனியா, செக்கோஸ்லாவியா, ஹங்கேரி, கியூபா, வடக்கு வியட்நாம் போன்ற நாடுகளில் பொதுவுடமைக் கருத்தைத் "திணிக்கும் முன்னர்" குடும்பத்தைச் சிதைத்தால், பொதுவுடமையை, மக்களே ஏற்றுக் கொள்வார்கள் என நினைத்து. ஆண், பெண் பிள்ளைகளைப் பிரித்து, "ஒழுக்கம் வேண்டாம், மதம் வேண்டாம். மக்கள் எல்லோரும் அரசின் அடிமைகள்" என ஆக்கினார்கள்.

ஆனால் மனிதனை, "தன் சுயாதீனத்தின்படி வாழப்படைத்த கடவுள், மனிதனை அடிமைப்படுத்த விடுவாரோ?" பொதுவுடமை 70 ஆண்டுகள் மட்டுமே, கானல் நீராகக் காட்சி தந்தது. இன்று பொதுவுடமை, அகராதியில் (DICTIONARY), தான் உள்ளது. ஆனால் அன்பின் அடிப் படையில், ஆதிகாலக் கிறிஸ்தவர்கள் வாழ்ந்த முறையான "அவனவன் தேவைக்கேற்ப பகிர்ந்தளிக்கும் சமுதாயம்" இயேசுவின் மதிப்பீடு களை வாழ் வாக்கிக் காட்டியது. இதற்கெல்லாம் அடிப்படை குடும்ப வாழ்வில் ஜெபமே, குடும்ப செபத்தில், உடலால், உள்ளத்தால், செயலால், மன்றாட்டால், மன்னிப்பால், பகிர்தலால், விட்டுக் கொடுத்தலால் குடும்பம் இறையரசின் ஓர் அங்கமாகத் திகழ்கிறது.

---

**விண்ணக வாழ்வின்**
**15-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி**

தோற்றம்: 02-07-1952



மறைவு: 02-06-2008

**திருமதி. M. பாத்திமா**

ஆண்டவர்மேல் நம்பிக்கை வைத்திருப்பவர்களோ புதிய ஆற்றல் பெறுவர் - எசா.40:31

**நினைவுத் திருப்பலி:** 02-06-2023 வெள்ளிக்கிழமை **காலை 6.00 மணியளவில் புதுவை,** திரு இருதய ஆண்டவர் பசிலிக்காவில் நினைவு **திருப்பலி நிறைவேற்றப்படும்.**

**அன்பின் நினைவில் துயருறும்**

**கணவர்: I. பத்திநாதன்,**
**மற்றும் பிள்ளைகள்**
**ரெட்டியார்பாளையம்.**

## விண்ணக வாழ்வின் 40-ஆம் ஆண்டு அன்பு நினைவு

தோற்றம்: 01-09-1905



மறைவு: 30-05-1983

**S.LOUIS AROULAPA SELVARADJOU**

(முன்னாள் ஆசிரியர், பெத்தி செமினேர் மேல்நிலைப்பள்ளி, புதுச்சேரி-1)

அவர்களின் ஆன்மாவிற்கு நித்திய இளைப்பாற்றியையும், முடிவில்லா விண்ணக வாழ்வையும் அளித்தருளும். 1கர்.1மங்.1திரி.

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காகப் புதுவை புனித ஜென்ம ராக்கினி அன்னை பேராலயத்தில் 30-5-2023 செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணிக்கு நிறைவேற்றப்படும் திருப்பலியில் கலந்துகொண்டு வேண்டிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பிரிவால் துயருறும்

மகன்கள், மகள்கள், மருமகள், பேரப்பிள்ளைகள், கொள்ளுப்பேரப்பிள்ளைகள், மற்றும் குடும்பத்தினர்.

## விண்ணக வாழ்வின் 6-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்:28-03-1976



மறைவு: 03-06-2017

**ஜூலியஸ் பால்ராஜ்**

"இத்தகைய கடவுளே என்றென்றும் நம் கடவுள், அவரே நம்மை இறுதிவரை வழி நடத்துவார்" - திபா 48:14

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 03-06-2023 சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு இறையூர் புனித ஜெபமாலை அன்னை ஆலயத்தில் நிறைவேற்றப்படும் திருப்பலியில் கலந்துகொண்டு ஜெபிக்க அன்புடன் அழைக்கிறோம்

பிரிவால் துயருறும்

**அம்மா, மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள்.**

**எறையூர்.**

## விண்ணக வாழ்வின் 39-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

பிறப்பு: 18-01-1926



மறைவு: 28-05-1984

**MARCELIN MANUEL DE CONDINGUY**

உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார் – யோவான்.11:25

**இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 28-05-2023 ஞாயிறுக்கிழமை மாலை 5.30 மணிக்கு புதுவை, புனித ஜென்ம ராக்கினி அன்னை பேராலயத்தில் நிறைவேற்றப்படும் திருப்பலியில் பங்குகொண்டு அன்னாரது ஆன்ம சாந்திக்காக செபிக்க வேண்டுகிறோம்.**

பிரிவால் துயருறும்

**மகள்கள், மருமகள், மருமகன், பேரப்பிள்ளைகள், கொள்ளுப்பேரன் மற்றும் உறவினர்கள்.**

## விண்ணக வாழ்வின் 30-ஆம் நாள் நினைவு அஞ்ச-



*ஆண்டவரின் கைகளில் நீர் அழகிய மணிமுடியாக திகழ்வாய் உன் கடவுளின் கரத்தில் அரச மகுடமாய் விளங்குவாய் - எசா 62:3*

அன்பின் ஊற்றே இறைவா, இவ்வுலகில் எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து, எங்கள் வாழ்விற்கு வழிகாட்டியாய் இருந்து, எங்களுக்கு இறைபக்தியையும், நல்ல பண்புகளையும் ஊட்டி வளர்த்து இறைவேண்டலால், பாச செய-னால் அனைவரின் மனதிலும் அமர்ந்து நித்திய சமாதானத்தில் இளைப்பாற உம்மால் அழைத்துக்கொள்ளப்பட்ட எம் அருட்சகோதரி **ஹிலேர் மேரி** அவர்களுக்கு நித்திய பேரின்பத்தை அளித்தருளும் ஆமென்.

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 30-05-2023 செவ்வாய் அன்று காலை 6.00 மணிக்கு முத்தியால்பேட்டை, புனித செபமாலை அன்னை ஆலயத்தில் திருப்ப- நிறைவேற்றப்படும்.

ஆரோக்கியபுரம் R.N.கண்டிகை, காஞ்சிபுரம்.

அருட்சகோதரி **ஹிலேர் மேரி** FIHM

| மண்ணக பிறப்பு | விண்ணக பிறப்பு |
|---|---|
| 19.09.1931 | 01.05.2023 |

வார்த்தைப்பாடு
20.05.1950

பிரிவால் துயருறும்

உடன் பிறப்புக்கள் மற்றும் உறவினர்கள்.

## விண்ணக வாழ்வின் 2-ஆம் ஆண்டு நினைவு

மண்ணில்: 13.01.1954



விண்ணில்: 02.06.2021

திருமதி **பொலேத் எ-சபெத் ரூக்ஸ்**

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" யோவான்.11:25

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 02-06-2023 வெள்ளி காலை 11.00 மணிக்கு புனித ஜென்ம ராக்கினி அன்னை பேராலயத்தில் திருப்ப- நிறைவேற்றப்படும்.

ஆண்டவரே முடிவில்லா ஒளி இவர்மேல் ஒளிர்வதாக சமாதானத்தில் இவரின் ஆன்மா என்றென்றும் இளைப்பாறுவதாக.

பிரிவால் துயருறும்

கணவர், மகன்கள், மருமகள் மற்றும் உறவினர்கள்.



# தீரத் தியாகி

**(புனித தேவசகாயம் வரலாறு)**

- Dr. **தீபக் தாமஸ்,**
பல் மருத்துவர், புதுவை.



"அதிகாரி கோபத்தோடு
இந்நாட்டிலுள்ளோர் எல்லோரும்
நம் மன்னரை பணிந்தேயாக வேண்டும்.
மீறுவோருக்கு தண்டனை அளிப்பது
என் போன்றோரின் கடமை.
அஞ்சுதெங்குக் கோட்டையருகில்
அடங்க மறுக்கும் இவனை
அழைத்துச் சென்று கட்டி வையுங்கள்.
மீன்களுக்கு இரையாக
மனிதன் ஒருவனை கொடுக்கிறோம்
என முரசடித்துச் சொல்லுங்கள்.
மதமாற்றம் என்று யோசிப்பதற்கே
மக்கள் இனி பயப்பட வேண்டும்."
என உத்தரவிட்டார்.

தேவசகாயம் கட்டி வைக்கப்பட்டார்.
கடும் தண்டனைக்கு உள்ளானார்.
அரச தண்டனைக்கும் அஞ்சாமல்
அவரைக் காணவந்தனர் மக்கள்.
அவரின் போதனைகளை கேட்டனர்.
மீனுக்கு இரையாகவில்லை அவர்.
மக்களுக்கு இறையாக ஆனார்.
கையறுநிலையிருந்த டிலனாய்
கண்ணுக்கு கண்ணான நண்பனுக்கு
கலங்காமல் இருக்குமாறு கூறி
கடிதம் அடிக்கடி தீட்டினார்.



தேவசகாயம் பிள்ளை அடுத்ததாக
திருவனந்தபுரம் கொண்டு வரப்பட்டு
கொடுஞ்சிறையில் அடைக்கப்பட்டார்.

தேவசகாயத்தின் திருமுகத்தை காண
திரளான மக்கள் சிறைக்கு வந்தனர்.
பிள்ளை இப்போது போதகரும் அல்லவா?
திக்குமுக்காடியது சிறைச்சாலை.

மக்கள் எழுச்சி கண்டு மன்னர் துணுக்குற்றார்.
இவனை இரகசிய இடத்தில் அடையுங்கள்.
என இரகசியமாக உத்தரவிட்டார்.
துணைவர் இருக்கும் இடம் தேடி
திக்கெட்டும் அலைந்தாள் ஞானப்பூ.

---



மண்ணில் 24-02-1943

விண்ணில் 03-06-2021

**திருமிகு. பிரான்சிஸ் ஆ. ரோச**
M.A.,(U.S.A.), B.A.(Litt), M.Ed.

Most Respected. **FRANCIS A. Roche** Retd. Principal St.Joseph's Nursery School & Baba Mat. Hr.Sec.School, Cuddalore.

## விண்ணக வாழ்வின் 2–ஆம் ஆண்டு நினைவேந்தல்

*நான் ஆண்டவரின் இல்லத்தில் நெடுநாள் வாழ்ந்திருப்பேன் - திபா 23:6*

ஓ இனிய இயேசுவே! அன்பிற்கும் நீதிக்கும் உறைவிடமான ஆண்டவரே! எங்கள் மத்தியில் சூரியன்போல் பிரகாசித்து! உமது அளவில்லாத அன்பினால் அழைத்துக் கொள்ளப்பட்ட

*திரு.* **பிரான்சிஸ் ஆ. ரோச்**

அவரின் ஆன்மாவிற்கு இரக்கம் புரிந்து நித்திய பேரொளியில் சேர்த்து, முடிவில்லா பிரகாசத்தை அவருக்கு அளித்தருள இறைவா உம்மை கரங்குவித்து மன்றாடுகிறோம். - ஆமென்.

**பிரிவிலும் நம்பிக்கையுடன் மன்றாடும்**

மனைவி: திருமதி. **மேரி ஜெசிந்தா ரோச்,** B.A.,B.Ed.
பிள்ளைகள்:
F. **ஜெரோம் லெயோனார்டு ரோச்,** M.B.A.,
F. **பெ-க்ஸ் பெனடிட் ரோச்,** Roche, M.C.A.
F. **மேரி செசி-யா ரோச்,** B.E., M.B.A.
F. **பேட்ரிக் ஜெயராஜ் ரோச்,** B.Tech., M.E.

கடலூர்–1.

**Published and Printed by Very Rev. Msgr. A. Arulanandam on behalf of Most Rev. Dr. FRANCIS KALIST,**
Archbishop of Pondicherry & Cuddalore. Printed at Mission Press, 196, Cathedral Street, Puducherry - 605 001.
Published from Mission Press, 196, Cathedral Street, Puducherry-605 001. Editor: **Very Rev. Msgr. A. Arulanandam.** Manager : **Very Rev. Msgr. A. Arulanandam.**